என்றால் ஆங்காங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள், உள்ளூரில் இருக்கின்ற ஊராட்சிமன்றத் தலைவர்கள் ஆகியோர் எல்லாம் நடவடிக்கை எடுத்தால் அந்தச் சங்கங்கள் இலாபத்தில் இயங்க இந்த அரசும் வகை செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம்.

*3751. திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் புதியதாக அமைய உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தினை மொரப்பூரில் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தர்மபுரி மாவட்டத்தில் மொரப்பூரில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதால் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அரசின் மாநில பால்வளத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மூலம் அமைக்க கருத்துரு உள்ளது.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் முதல் முறையாக தர்மபுரி மாவட்டத்திற்கு வருகை தந்து அந்த பால் குளிரூட்டும் நிலையம் அமைவதற்கான இடத்தை எல்லாம் பார்வையிட்டு இருக்கிறார்கள். லாரிகளில் சென்னைக்கு பால் கொண்டு வருவதைத் தவிர்த்து அங்கே இரயில் நிலையம் இருக்கின்ற காரணத்தால் குறைந்த செலவிலேயே அந்தப் பாலைக் கொண்டு வருவதற்குரிய வகையில் அந்த பால் குளிரூட்டும் நிலையத்தை உருவாக்கித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1990 மே 3]

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கருத்துருவில் உள்ளது என்பதைத் தெரிவித்த பிறகும் உடனடியாகச் செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். தேசிய பால் வள நிறுவனத்தின் மூலம் 3-வது பால் பெருக்குத் திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்து நடவடிக்கை எடுக்கும்போது அதில் மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையமும் அமையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. முல்லைவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தைப் புதிதாக துவங்க அரசுக்கு ஆகும் செலவு எவ்வளவு என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு லிட்டர் குளிரூட்டும் நிலையம் அமையும் என்பதைப் பொறுத்து செலவும் வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வைக்கம் நகரில் தந்தை பெரியாருக்கு நினைவுச் சின்னம்.

***5788. திரு. மு. இராமநாதன் :**

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தந்தை பெரியாருக்கு கேரளத்தில் வைக்கம் நகரில் நினைவுச் சின்னம் எழுப்பும் தமிழக அரசின் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கேரள மாநில பொதுப்பணித்துறையின் மூலம் வைக்கத்தில் பெரியார் நினைவகம் கட்டப்படவுள்ளது. தற்போது விரிவான திட்ட மதிப்பீடு கேரள மாநில பொதுப்பணித் துறையிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அவை நமது பொதுப்பணித் துறையால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. நினைவகத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருணாசிரம தர்மம் என்ற பெயரால் தெருவில் நடக்கக்கூட மறுக்கப்பட்ட அந்த ஜாதிக் கொடுமையை எதிர்த்து வைக்கத்தில் போராட்டம் நடத்தி சிறைப்பட்டு சித்திரவதைகளை அனுபவித்தவர் தந்தை பெரியார் அவர்கள். ஆகவே அந்த